உ

சிவமயம்

# திருமுறை அமுதம்



சித்திரமேழி இளவாலை

சைவப்புலவர்மணி, வித்துவான், ஞானசிரோமணி,

## கலாபூஷணம் வயிரவப்பிள்ளை செல்லையா

அவர்கள். சிவபதம் அடைந்தமை குறித்த நினைவு வெளியீடு

**சித்திரபானு பங்குனி 22 (05-04-2003)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ


சிவமயம்

மலர்வு

15

04

1920



உதிர்வு

06

03

2003

சித்திரமேழி இளவாளை

சைவப்புலவர்மணி, வித்துவான் ஞானசிரோமணி

கலாபூஷணம்

# அமரர் திரு. வயிரவப்பிள்ளை செல்லையா

## அவர்கள்

## திதி நிர்ணய வெண்பா

*சித்திர பானுமாசிப் பூர்வபக்கத் திருதியையில்*
*சித்திர மேழிபெற்ற* ***செல்லையா*** *- வித்தகனார்*
*கற்றோரும் உற்றோருங் கண்கலங்கச் சென்றடைந்தார்*
*சிற்சபையில் ஆடுசிவன் தாள்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வளம்

***பிறப்பு:***

1920-04-15. சித்திரமேழி இளவாலையைச் சேர்ந்த அமரர்கள் திரு. திருமதி. வயிரவப்பிள்ளை சின்னத்தங்கம் தம்பதியினரின் செல்வப்புதல்வனாக அவதரித்தார்.

***கல்வி:***

ஆரம்பக்கல்வியை இளவாலை மெய்கண்டான் வித்தியாலத்திலும் சென் அன்றூஸ் வித்தியாலயத்திலும் கற்று சென் கென்றீஸ் கல்லூரியில் ஆங்கிலக் கல்வியையும் கற்றார்.

1939 இல் J. S. C. பரீட்சையில் சித்தியடைந்தார். 1942 இல் S. S. C. பரீட்சையில் சித்தியடைந்தார். 1942 இல் யாழ்/ ஸ்ரான்லி மத்திய மகாவித்தியாலயத்தில் A. S. C. வகுப்பிற் சேர்ந்து 1945 இல் A. S. C. பரீட்சைக்குத் தோற்றினார். 1946 இல் சென்னைச் சைவசித்தாந்த சமாஜத்தார் நடாத்திய இளஞ்சைவப் புலவர் தேர்வில் சித்தி பெற்றார். 1960 இல் சென்னைச் சர்வகலாசாலை நடாத்திய வித்துவான் பரீட்சையில் சித்திபெற்றார். 1953 இல் சைவப்புலவர் பரீட்சையில் சித்திபெற்றார்.

***தொழில்:***

1948 அக்டோபரில் புத்தளம் சாஹிராக் கல்லூரியில் ஆசிரியராக நியமனம் பெற்றார். அதன் பின்னர் 1951 மார்ச்சில் கொழும்பு இந்துக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட அன்று ஆசிரியராக கடமையேற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1959 இல் யாழ்/ இளவாலை மெய்கண்டான் வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையேற்றார். 1971 இல் அதே வித்தியாலயத்தில் அதிபர் பதவியை ஏற்றுக் கொண்டார். 1976 இல் பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயத்தின் அதிபராகக் கடமை யாற்றி 1978 இல் சேவையிலிருந்து ஓய்வுபெற்றார்.

## குடும்பம்:

துன்மலை இளவாலையைச் சேர்ந்த கனகசபை மகேஸ்வரியை 1949 இல் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொண்டு புவனேந்திரராணி, ஞானேந்திரராணி, மனோகரராணி, தயாபரராணி, நவநீதகுமார் என்னும் ஐந்து பிள்ளைகளையும், ஸ்ரீஸ்காந்தன், இராஜரட்னம், விமலேஸ்வரன் ஆகிய மருமக்களையும் சாந்தினி கணேஷ், கலைவாணி, கோமதி, இந்துஷா, தேனுஷன், நிரூஷன், என்னும் பேரக்குழந்தைகளையும் பெற்று 2003ம் ஆண்டு வரை இல்லறத்தை இனிதே நடாத்தினார்.

## ஆற்றிய பணிகள்:

1955 இல் அகில இலங்கை தமிழ்ச்சங்கத்தைத் தாபித்து அதன் கௌரவ செயலாளராக பணிபுரிந்தார்.

1956, 1957 இல் தமிழ்மொழிக்கு சம உரிமை கோரி அகில இலங்கைத் தமிழ்ச்சங்கத்தின் சார்பில் கொழும்பில் மூன்று மாநாடுகளை நடாத்தினார்.

1960 இல் மல்லாகம் இந்துக்கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்ட இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் தலைவராக தெரிவு செய்யப்பட்டு தொடர்ந்து 12 வருடங்கள் தலைவராகப் பணிபுரிந்தார்.

1961 இல் சைவ கலாசார மன்றத்தை அமைத்து அதன்மூலம் இளவாலை மெய்கண்டான் வித்தியா லயத்தை மகாவித்தியாலயமாக்கும் முற்சியில் ஈடு பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1962 இல் திரு. K. இராமநாதன் செட்டியார் B.A, B.L அவர்களுக்கு யாழ்/ நாவலர் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் வரவேற்பு விழா ஒன்றை நடாத்தினார். 1963 இல் யாழ்/ இளவாலை மெய்கண்டான் வித்தியாலயத்தில் சைவ மாகாநாடு ஒன்றை நடாத்தினார். அதே ஆண்டு இளவாலை பெரியவிளானில் சைவ கலாசார மன்றத்தின் அனுசரணையுடன் விளையாட்டுப்போட்டி ஒன்றையும் நடாத்தி வெற்றி பெற்றோருக்குப் பரிசில்களையும் வழங்கினார்.

1964 இல் மட்டக்களப்பில் அகில இலங்கைச் சைவப்புலவர் மாகாநாட்டை நடாத்தி சைவப் புலவர் அருணாசல தேசிகருக்கு கௌரவப்பட்டம் வழங்கிக் கௌரவித்தார்.

1965 டிசம்பரிலும் 1966 ஜனவரியிலும் சென்னை சைவசித்தாந்த மகாசமாஜம் சிதம்பரத்தில் சைவவிழா ஒன்றை நடாத்தியது. அவ்விழாவில் அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கமும் இணைந்து மகாநாடு ஒன்றை நடாத்தியது. அம்மகாநாட்டிற்கு பண்டிதை செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி, புரவலர் இ. வைத்திலிங்கம் (பொறியியலாளர்) மட்டக்களப்பு சைவப்புலவர் பண்டிதர் திரு. தி. கிருஷ்ணப்பிள்ளை முதலியோரை அழைத்துச் சென்று சொற் பெருக்காற்ற வைத்தார். அந்நிகழ்ச்சியின் போது விஷக்கடி வைத்தியர் க. சிற்றம்பலத்துக்கு சைவப்புலவர் பட்டம் வழங்கப்பட்டது. சைவப்புலவர் திரு. சு. செல்லத்துரை சிவதீட்சை பெற்றார்.

1966 இல் கோலாலம்பூரில் நடைபெற்ற உலகத்தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில் அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கப் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார்.

1966 இல் கண்டியில் அகில இலங்கைச் சைவப் புலவர் சங்க மகாநாடு நடைபெற்றது. அம்மகாநாட்டில் 'கலைமகள்' ஆசிரியர் கி. வா ஜகந்நாதன் பிரதம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். அவருக்குப் பொன்னாடை போர்த்தி 'சைவபூஷணம்' பட்டமும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

1967 இல் நாவலப்பிட்டியில் ஆத்மஜோதி முத்தையாவின் ஆதரவோடு சைவமாகாநாடு நடாத்தினார். அதே ஆண்டு இளவாலை மெய்கண்டான் வித்தியாலயத்தில் நாவலர் விழாவை நடத்தினார். இவ்விழாவில் நாவலர் உருவப்படம் ஊர்வலமாக எடுத்துவரப்பட்டது.

1968 இல் கொழும்பு இந்துக்கல்லூரியில் அகில இலங்கைச் சைவப்புலவர்சங்க மகாநாட்டை நடாத்தினார். இம் மகாநாட்டில் புலவர் கருணாலய பாண்டியருக்கு சித்தாந்த வித்தகர் பட்டம் அளித்து பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது. இதே ஆண்டு நாவலப்பிட்டியில் சிவதீட்சை வைபவத்தை நடாத்தினார்.

1968 இல் சென்னையில் நடந்த உலகத்தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார்.

1969 இல் திருக்கேதீஸ்வரம் அப்பா மடத்தில் நாவலர் உருவப் படத்தை திரைநீக்கம் செய்து வைத்து மகாநாடு, அபிஷேக ஆராதனை, அன்னதானம் முதலியவையும் நடாத்தினார். இதனை அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கமும் சைவ இளைஞர் மத்திய மகாசபையும் இணைந்து நடத்தின. இதே ஆண்டு ஹற்றன் இந்துமகா சபையின் ஆதரவோடு அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் சைவமகாநாடு ஒன்றை நடத்தியது.

1970 இல் வேலணையில் அகில இலங்கை சைவப்புலவர் சங்க மகாநாடு நடாத்தப்பட்டது. இம் மகாநாட்டில் சைவப்புலவர் பட்டங்களும் கௌரவப் பட்டங்களும் வழங்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1971 இல் யாழ் நகர மண்டபத்தில் அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கப் பத்தாண்டு நிறைவு விழாக் கொண்டாடப்பட்டது. இதனையொட்டி கலை விழா ஒன்றையும் நடாத்தினார். இது மட்டுமன்றி அகில இலங்கை ரீதியில் திருமுறை ஓதல், நடனம், நாடகம், ஓவியம் ஆகிய போட்டிகளை நடாத்தி வெற்றி பெற்றவர்களுக்கு தங்கப்பதக்கத்தை பரிசாக வழங் கவும் வழிவகுத்தார். 1971 இல் யாழ்ப்பாணத்தில் நடந்த உலகத்தமிழ் மகாநாட்டில் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார். யாழ்/ இளவாலை மெய்கண்டான் வித்தியாலயத்தில் முதன் முதலாக இல்லங்கள் வகுத்து விளையாட்டுப்போட்டிகள் நடத்தினார். அவ்வாண்டு பாலர் வகுப்பு பொருட்காட்சியும் கலைவிழாவும் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் அணி வகுப்பு ஒன்றையும் நடாத்தினார். இலங்கை மெய்கண்டான் ஆதீனத்தோடு இணைந்து 1975 இல் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் சைவ சித்தாந்த எழில் ஞானப் பெருவிழாவை நடத்தினர்.

1976 இல் பன்னாலை சேர் கனகசபை வித்தி யாலயத்திற்கு அரச உதவிப்பணம் 30 ஆயிரம் ரூபாவும் பொதுமக்கள் கொடுத்த பணமும் கொண்டு மேடையுடன் கூடிய மண்டபம் ஒன்றை அமைத்தார்.

1979 இல் மலேசிய சுற்றுப்பிரயாணம் ஒன்றை மேற்கொண்டு அங்கு சொற்பொழிவு ஆற்றினார்.

1978 இல் கீரிமலையில் யோகசுவாமிமகளிர் தவநிலையம் ஒன்றை நிறுவி அந்நிலையத்தின் தலைவராகப் பணியாற்றினார்.

1992ம் ஆண்டு நாட்டில் நிலவிய பிரச்சனை காரணமாக இடம்பெயர்ந்து மானிப்பாயில் தங்கியிருந் தார். இக்காலத்தில் சமயச் சொற்பொழிவு முதலிய வற்றைச் செய்து வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை மெய்கண்டார் ஆதீன குருமுதல்வர் சமாதியடைந்ததால் ஆதீனத்தை மீளவும் தாபித்து சீலத்திரு ஞானப்பிரகாச பரமாச்சாரிய சுவாமிகளைக் குரு முதல்வராக்கிச் சேவையாற்றினார்.

1995ம் ஆண்டு மீண்டும் இடம்பெயர்ந்து வவுனியாவில் தங்கினார். இக்காலத்தில் கருத்தரங் குகள், சொற்பொழிவுகள் போன்றவற்றைச் செய்து வந்தார்.

1997ம் ஆண்டு சித்திரை மாதம் சைவநீதி என்ற மாத சஞ்சிகைக்கு கௌரவ ஆசிரியராகி அதன் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவினார். சைவநீதி சஞ்சிகை மூலம் பல போட்டிகளை நடத்தி தங்கப்பதக்கம் முத லாம் பெறுமதியான பரிசில்களும் வழங்கப்பட்டன.

2001ம் ஆண்டு வைகாசி மாதம் கொழும்பில் "சைவசித்தாந்த எழில் ஞானப் பெருவிழா" சிறப்புற நடைபெற நெறிப் படுத்தித் தலைமை தாங்கி நடத்தினார். இவ்விழாவில் திருவாடுதுறை ஆதீன இளைய சந்நிதானம் எழுந்தருளி ஆசியுரை வழங்கியது.

2002ம் ஆண்டு மார்கழி மாதம் கலாசார அமைச்சி னால் இவருக்கு கலாபூஷண விருது வழங்கப்பட்டது.

2003ம் ஆண்டு மார்ச் மாதம் 6ம் திகதி வியாழக் கிழமை முற்பகல் சிவபதம் அடைந்தார்.

தினந்தோறும் திருமுறைப் பாராயணம் செய்யும் நியமமுடையவர். வீட்டுக்கு வந்து சந்திப்பவர்களுக்கு திருமுறைகளின் பெருமைகளைக் கூறி அவற்றைத் தினமும் பாராயணம் செய்யும்படி கூறுவார். திருமுறைப் பாடல்கள் அடங்கிய நூல்களைக் கொடுப்பார். இறுதி வரை திருமுறை நூலை கைவிடாது வைத்திருந்து பாராயணம் பண்ணிக்கொண்டு இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுறை அமுதமாக இந்நினைவு மலர் வெளி வருகிறது. அமுதம் பருகினால் உடல் பிணி அனுகாது. திருமுறைப்பாராயணம் செய்தால் உடல்நலமுறும் உளம்செம்மையுறும். திருமுறை அமுதத்தில் வேண்டற் பதிகங்கள் சில இடம் பெறுகின்றன. ஐயாவின்நித்திய பாராயணப் பதிகங்களாக இதில் உண்டு. இவற்றை ஓதிப் பயன் பெறுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

குல தெய்வமாகிய சித்திரமேழி ஞான வைரவப் பெருமானைத் தினமும் சிந்தித்து வந்திக்கும் நியம முடையவர். வைரவப்பெருமான் அருளால் மரண உபாதை இல்லாது அவரது உயிர் பிரிந்தது. அன்னாரின் ஆத்மா முத்தியடையப் பிரார்த்திப்போம்.

***ஆக்கியளித்தவை:***

1981 இல் சித்திரமேழி ஞான வைரவர் ஆலய கும்பாபிஷேக மலரை மலரின் ஆசிரியராக இருந்து வெளியிட்டார்.

1. திருமணம் 1975 அக்டோபர்
2. நால்வர் நெறியில் நாவலர் 1979 டிசம்பர்
3 கருணை மழை பொழிந்த வள்ளல் 1989 ஆகஸ்ட்
4. சித்திரமேழி ஞானவையிரவர் போற்றித்திரு அகவல் ஏப்ரல் 1991
5. பெரியவிளான் வடசேரிப்பிள்ளையார் போற்றித் திருஅகவல் 1992
6. சுதுமலை புவனேஸ்வரி அம்மன் போற்றித் திருஅகவல் 1992
7. சைவ நீதிக்கதைகள் முதலாம் பாகம் 1992



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. இறைநாம அர்ச்சனை 1992

9. மானிப்பாய்ச்சோதி வேம்படி காளியம்பாள் போற்றித் திருஅகவல் 1995 ஏப்ரல்

10. மஹாவிஷ்ணு போற்றித் திருஅகவல் 1996 டிசம்பர்.

11. வவுனியா குருமன்காடு காளியம்பாள் பஞ்சதோத்திரப் பாமாலை

12. வவுனியா வேப்பங்குளம் சித்திவிநாயகர் திருவூஞ்சற் பாமாலை 1996 மார்ச்

13. நவராத்திரி நாயகிகள் போற்றித் திருஅகவல் 1996 அக்டோபர்

14. செயா உலக நீதிக்கதைகள் முதலாம் பாகம் 1996.

15. திருவருட் பாத்திரட்டு1997

16. மெய்கண்டான் ஆதீன வரலாறு 1997

17. அற்புதம்

18. தெய்வக் கீரத்தனாஞ்சலி 2000

ஈழத்துச் சித்த சிரோமணிகள் அச்சில் உள்ள நூல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. நவக்கிரகங்களினால் ஏற்படும் துன்பம் விலகவும் ஆயுள்பலம் பெறவும் ஓதவேண்டிய பதிகம்

பண் - பியந்தைக்காந்தாரம் (2 -85)

# கோளறு பதிகம்

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி
சனிபாம் பிரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 1

என்பொடு கொம்பொடாமை யிவைமார் பிலங்க
எருதேறி யேழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்து என்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றோ டேழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 2

உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கள் முடிமேலணிந்து என்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாதுபூமி
திசைதெய்வ மான பலவும்
அருநெறி நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிநுதல் மங்கையோடுவடபா லிருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமேலணிந்து என்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடுநோய் களான பலவும்
அதிகுணம் நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 4

நஞ்சணி கண்டன் எந்தை மடவாள் தனோடும்
விடையேறும் நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேலணிந்து என்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உருமிடியுமின்னு
மிகையான பூதம் அவையும்
அஞ்சிடும் நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 5

வாள்வரி யதள தாடை வரிகோவ ணத்தர்
மடவாள் தனோடும் உடனாய்
நாண்மலர் வன்னிகொன்ற நதிசூடிவந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே. 6

செப்பிள முலைநன்மங்கை யொருபாகமாக
விடையேறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமேலணிந்து என்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும்வாத மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேள்பட விழிசெய்தன்று விடைமேலிருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வான்மதி வன்னிகொன்றை மலர்சூடிவந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழ் இலங்கை அரையன் தனோடும்.
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 8

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமக ளோடெருக்கு முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
மலர் மிசை யோனுமாலும் மறையோடுதேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேருநல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 9

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியுநாக முடிமேலணிந்து என்
உளமே புகுந்த அதனால்
புத்தரொடு அமணைவாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 10

தேனமர் பொழில்கொள் ஆலை விளைசெந்நெல் துன்னி
வளர் செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமாபு ரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளு நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே ! 11

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. வெப்பத்தால் ஏற்படும் நோய்கள் நீங்குவ தற்கு ஓத வேண்டிய பதிகம்

பண் - காந்தாரம் (2-66)

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிய திருநீற்றுப் பதிகம்

திருச்சிற்றம்பலம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே. 1

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் திருநீறே. 2

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்தியமாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே. 3

காண வினியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருவால வாயான் திருநீறே. 4

பூச வினியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச வினியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் திருநீறே. 5

அருத்தம தாவது நீறு அவல மறுப்பது நீறு
வருத்தம் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் திருநீறே. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எயிலது அட்டது நீறு இருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கியமாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தாலவாயான் திருநீறே. 7

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி ஆலவாயான் திருநீறே. 8

மாலொடு அயன் அறியாத வண்ணமும் உள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏலவுடம்பிடர் தீர்க்கும் இன்பம் தருவது நீறு
ஆலமது உண்டமிடற்று எம் ஆலவாயான் திருநீறே. 9

குண்டிகைக் கையர்களோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண் திகைப்பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்டிசைப்பட்ட பொருளார் ஏத்தும் தகையது நீறு
அண்டத்தவர் பணிந்து ஏத்தும் ஆலவாயான் திருநீறே. 10

ஆற்றல் அடல்விடை ஏறும் ஆலவாயான் திருநீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம்பந்தன்
தேற்றித் தென்னன் உடல் உற்ற தீப்பிணியாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. கண்வியாதி நீங்குவதற்கு ஓதும் பதிகம்

பண் - செந்துருத்தி (7-95)

### தேவாரம்

திருச்சிற்றம்பலம்

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி
ஆளாயிருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே. 1

விற்றுக் கொள்வீர் ஒற்றி யல்லேன் விரும்பி ஆட்பட்டேன்
குற்ற மொன்றுஞ் செய்த தில்லை கொத்தை யாக்கினீர்
எற்றுக் கடிகேள் என்கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்
மற்றைக் கண்தான் தாரா தொழிந்தால் வாழ்ந்து போதீரே. 2

அன்றில் முட்டா தடையுஞ் சோலை ஆரூ ரகத்தீரே
கன்று முட்டி யுண்ணச் சுரந்த காலி யவைபோல
என்றும் முட்டாப் பாடும் அடியார் தங்கண் காணாது
குன்றின் முட்டிக் குழியில் வீழ்ந்தால் வாழ்ந்து போதீரே. 3

துருத்தி உறைவீர் பழனம் பதியாச் சோற்றுத் துறையாள்வீர்
இருக்கை திருவா ரூரே உடையீர் மனமே எனவேண்டா
அருத்தி யுடைய அடியார் தங்க ளல்லல் சொன்னக்கால்
வருத்தி வைத்து மறுமை பணித்தால் வாழ்ந்து போதீரே. 4

செந்தண் பவளம் திகழுஞ் சோலை இதுவே திருவாரூர்
எந்தம அடிகேள் இதுவே ஆம்ஆறு உமக்காட் பட்டோர்க்குச்
சந்தம் பலவும் பாடும் அடியார் தம்கண் காணாது
வந்தெம் பெருமான் முறையோ என்றால் வாழ்ந்து போதீரே. 5

தினைத்தாள் அன்ன செங்கால் நாரை சேருந் திருவாரூர்ப்
புணைத்தார் கொன்றைப் பொன் போல் மாலைப் புரிபுன் சடையீரே
தனத்தா லின்றித் தாந்தாம்மெலிந்து தங்கண் காணாது
மனத்தால் வாடி அடியா ரிருந்தால் வாழந்து போதீரே. 6

ஆயம் பேடை அடையுஞ் சோலை ஆரூ ரகத்தீரே
ஏயெம் பெருமான் இதுவே ஆமா றுமக்காட் பட்டோர்க்கு
மாயங் காட்டிப் பிறவி காட்டி மறவா மனங்காட்டிக்
காயங் காட்டிக் கண்ணீர் கொண்டால் வாழ்ந்து போதீரே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழியாய்க் கடலாய்க் கலனாய் நிலனாய்க் கலந்த சொல்லாகி
இழியாக் குலத்திற் பிறந்தோம் உம்மை இகழா தேத்துவோம்
பழிதான் ஆவ தறியீ ரடிகேள் பாடும் பத்தரோம்
வழிதான் காணாத அலமந்து இருந்தால் வாழ்ந்து போதீரே. 8

பேயோ டேனும் பிரிவொன் றின்னா தென்பர் பிறரெல்லாங்
காய்தான் வேண்டிற் கனிதா னன்றோ கருதிக் கொண்டக்கால்
நாய்தான் போல நடுவே திரிந்தும் உமக்காட் பட்டோர்க்கு
வாய்தான் திறவீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே. 9

செருந்தி செம்பொன் மலருஞ் சோலை இதுவோ திருவாரூர்
பொருந்தித் திருமூ லட்டா னம்மே இடமாக் கொண்டீரே
இருந்தும் நின்றும் கிடந்தும் உம்மை இகழா தேத்துவோம்
வருந்தி வந்தும் உமக்கொன் றுரைத்தால் வாழ்ந்து போதீரே. 10

காரூர் கண்டத் தெண்தோள் முக்கண் கலைகள் பலவாகி
ஆரூர்த் திருமூ லட்டா னத்தே அடிப்பேர் ஆரூரன்
பாரூர் அறிய என்கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்
வாரூர் முலையாள் பாகங் கொண்டீர் வாழ்ந்து போதீரே. 11

திருச்சிற்றம்பலம்

❋❋❋

## 4. குளிர் சுரம், விஷக்கடி, செய்வினை முதலிய நீங்குவதற்கு ஓதும் பதிகம்

பண் - வியாழக்குறிஞ்சி (1-116)

### தேவாரம்

திருச்சிற்றம்பலம்

அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லு மஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பது முந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெம்மைத் தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். 1

காவினை யிட்டுங் குளம்பல தொட்டுங் கனிமனத்தால்
ஏவினை யாலெயின் மூன்றெரித் தீரென் றிருபொழுதும்
பூவினைக் கொய்து மலரடி போற்றுதும் நாமமடியோம்
தீவினை வந்தெமைத் தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முலைத்தட மூழ்கிய போகங்களுமற் றெவையு மெல்லாம்
விலைத்தலை யாவணங் கொண்டெமை யாண்ட விரிசடையீர்
இலைத்தலைச் சூலமுந் தண்டு மழுவு மிவையுடையீர்
சிலைத்தெமைத் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். 3

விண்ணுல காள்கின்ற விச்சா தரர்களும் வேதியரும்
புண்ணிய ரென்றிரு போதுந் தொழப்படும் புண்ணியரே
கண்ணிமை யாதன மூன்றுடை யீருங் கழலடைந்தோம்
திண்ணிய தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். 4

மற்றிணை யில்லா மலைதிரண் டன்னதிண் டோளுடையீர்
கிற்றெமை யாட்கொண்டு கேளா தொழிவதுந் தன்மைகொல்லோ
சொற்றுணை வாழ்க்கை துறந்துந் திருவடி யேயடைந்தோம்
செற்றெமைத் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். 5

மறக்கு மனத்தினை மாற்றியெம் ஆவியை வற்புறுத்திப்
பிறப்பில் பெருமான் றிருந்தடிக் கீழ்ப்பிழை யாதவண்ணம்
பறித்த மலர்கொடு வந்துமை யேத்தும் பணியடியோம்
சிறப்பிலித் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். 6

.........................................................................................7

கருவைக் கழித்திட்டு வாழ்க்கை கடிந்துங் கழலடிக்கே
உருகி மலர்கொடு வந்துமை யேத்துது நாமடியோம்
செருவி லரக்கனைச் சீரி லடர்த்தருள் செய்தவரே
திருவிலித் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். 8

நாற்ற மலர்மிசை நான்முகன் நாரணன் வாது செய்து
தோற்ற முடைய அடியு முடியுந் தொடர்வரியீர்
தோற்றினுந் தோற்றுந் தொழுது வணங்குதும் நாமடியோம்
சீற்றம தாம்வினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். 9

சாக்கிய பட்டுஞ் சமணுரு வாகி யுடையொழிந்தும்
பாக்கிய மின்றி யிருதலைப் போகமும் பற்றும் விட்டார்
பூக்கமழ் கொன்றைப் புரிசடை யீரடி போற்றுகின்றோம்
தீக்குழித் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம். 10

பிறந்த பிறவியிற் பேணியெஞ் செல்வன் கழலடைவான்
இறந்த பிறவியுண் டாகி லிமையவர் கோனடிக்கண்
திறம்பயில் ஞானசம் பந்தன செந்தமிழ் பத்தும்வல்லார்
நிறைந்த வுலகினில் வானவர் கோனொடுங் கூடுவரே. 11

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. பிரசவவேதனை நீங்கவும் தாயார் நோயில் லாது இருக்கவும் ஓதவேண்டிய பதிகம்

பண் - குறிஞ்சி (1-98)

### தேவாரம்

திருச்சிற்றம்பலம்

நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளே
றொன்றுடையானை யுமையொருபாக முடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறஎன்னுள்ளங் குளிரும்மே. 1

கைம்மகவேந்திக் கடுவனொடூடிக் கழைபாய்வான்
செம்முகமந்தி கருவரையேறுஞ் சிராப்பள்ளி
வெம்முகவேழத் தீருரிபோர்த்த விகிர்தாநீ
பைம்முகநாகம் மதியுடன் வைத்தல் பழியன்றோ. 2

மந்தமுழவம் மழலைததும்ப வரைநீழல்
செந்தண்புனமுஞ் சுனையுஞ்சூழ்ந்த சிராப்பள்ளிச்
சந்தம்மலர்கள் சடைமேலுடையார் விடையூரும்
எந்தம்மடிகள் அடியார்க்கல்லல் இல்லையே. 3

துறைமல்குசாரற் சுனைமல்குநீலத் திடைவைகிச்
சிறைமல்குவண்டுந் தும்பியும்பாடுஞ் சிராப்பள்ளிக்
கறைமல்குகண்டன் கனலெரியாடுங் கடவுளெம்
பிறைமல்குசென்னி யுடையவனெங்கள் பெருமானே. 4

கொலைவரையாத கொள்கையர்தங்கள் மதில்மூன்றும்
சிலைவரையாகச் செற்றனரேனுஞ் சிராப்பள்ளித்
தலைவரைநாளுந் தலைவரல்லாமை யுரைப்பீர்காள்
நிலவரைநீல முண்டதும்வெள்ளை நிறமாமே. 5

வெய்யதண்சாரல் விரிநிறவேங்கைத் தண்போது
செய்யபொன்சேருஞ் சிராப்பள்ளிமேய செல்வனார்
தையலோர்பாகம் மகிழ்வர்நஞ்சுண்பர் தலையோட்டில்
ஐயமுங்கொள்வ ராரிவர்செய்கை யறிவாரே. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேயுயர்சாரற் கருவிரலூகம் விளையாடும்
சேயுயர்கோயிற் சிராப்பள்ளிமேய செல்வனார்
பேயுயர்கொள்ளி கைவிளக்காகப் பெருமானார்
தீயுகந்தாடல் திருக்குறிப்பாயிற் றாகாதே. 7


மலைமல்குதோளன் வலிகெடவூன்றி மலரோன்றன்
தலைகலனாகப் பலிதிரிந்துண்பர் பழியோரார்
சொலவலவேதஞ் சொலவலகீதஞ் சொல்லுங்கால்
சிலவலபோலுஞ் சிராப்பள்ளிச் சேடர் செய்கையே. 8

அரப்பள்ளியானு மலருறைவானு மறியாமைக்
கரப்புள்ளிநாடிக் கண்டிலரேனுங் கல்சூழ்ந்த
சிராப்பள்ளிமேய வார்சடைச்செல்வர் மனைதோறும்
இரப்புள்ளீரும்மை யேதிலர்கண்டா லிகழாரே. 9

நாணாதுடைநீத் தோர்களும்கஞ்சி நாட்காலை
ஊணாப்பகலுண் டோதுவோர்க ளுரைக்குஞ்சொல்
பேணாதுறுசீர் பெறுதுமென்பீரெம் பெருமானார்
சேணார்கோயில் சிராப்பள்ளிசென்று சேர்மினே. 10

தேனயம்பாடுஞ் சிராப்பள்ளியானைத் திரைசூழ்ந்த
கானல் சங்கேறுங் கழுமலவூரிற் கவுணியன்
ஞானசம்பந்தன் நலமிகுபாட லிவைவல்லார்
வானசம்பந்தத் தவரொடுமன்னி வாழ்வாரே. 11

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ௬. இரத்தமழுத்தம், நீரிழிவு, மயக்கநிலை (Coma) முதலிய நோயிலிருந்து விடுபட ஓதவேண்டிய பதிகம்

### தேவாரம்

திருச்சிற்றம்பலம்

துளிவளர்திங்கள் துளங்கிவிளங்கச் சுடர்சடை சுற்றிமுடித்துப்
பணிவளர்கொள்கையர் பாரிடஞ்சூழ வாரிடமும் பலிதேர்வர்
அணிவளர்கோல மெலாஞ்செய்துபாச்சி லாச்சிரா மத்துறைகின்ற
மணிவளர்கண்டரோ மங்கையைவாட மயல்செய்வதோ இவர்மாண்பே. 1

கலைபுனைமானுரி தோலுடையாடை கனல்சுட ராலிவர்கண்கள்
தலையணிசென்னியர் தாரணிமார்பர் தம்மடிகள் ளிவரென்ன
அலைபுனல் பூம்பொலில் சூழ்ந்தமர்பாச்சி லாச்சிரா மத்துறைகின்ற
இலைபுனைவேலரோ பைந்தொடிவாட இடர்செய்வதோ இவரீடே. 2

வெஞ்சுடராடுவர் துஞ்சிருள்மாலை வேண்டுவர்பூண்பது வெண்ணூல்
நஞ்சடைகண்டர் நெஞ்சிடமாக நண்ணுவர் நம்மைநயந்து
மஞ்சடைமாளிகை சூழ்தருபாச்சி லாச்சிரா மத்துறைகின்ற
செஞ்சுடர் வண்ணரோ பைந்தொடிவாடச் சிதைசெய்வதோ இவர்சீரே. 3

கனமலர்க்கொன்றை அலங்கலிலங்கக் கனல்தரு தூமதிக்கண்ணி
புனமலர்மாலை யணிந்தழகாய புனிதர்கொ லாமிவரென்ன
அனமலிவண்பொழில் சூழ்தருபாச்சி லாச்சிரா மத்துறைகின்ற
மனமலிமைந்தரோ மங்கையைவாட மயல்செய்வதோ இவர்மாண்பே. 4

மாந்தர்தம்பால்நறு நெய்மகிழ்ந்தாடி வளர்சடை மேற்புனல்வைத்து
மோந்தைமுழாக்குழல் தாளமோர்வீணை முதிரவோர்வாய் மூரிபாடி
ஆந்தைவிழிச்சிறு பூதத்தர்பாச்சி லாச்சிரா மத்துறைகின்ற
சாந்தணிமார்பரோ தையலைவாடச் சதுர்செய்வதோ இவர்சார்வே. 5

நீறுமெய்பூசி நிறைசடைதாழ நெற்றிக்கண் ணாலுற்றுநோக்கி
ஆறதுசூடி ஆடரவாட்டி யைவிரற் கோவணவாடை
பார்தருமேனியர் பூதத்தர்பாச்சி லாச்சிரா மத்துறைகின்ற
ஏறதுவேறியா ரேழையைவாட இடர்செய்வதோ இவரீடே. 6

பொங்கிளநாகமோ ரேகவடத்தோ டாமைவெண் ணூல்புனைகொன்றை
கொங்கிளமாலை புனைந்தழகாய குழகர்கொலாமிவரென்ன
அங்கிளமங்கையோர் பங்கினர்பாச்சி லாச்சிரா மத்துறைகின்ற
சங்கொளிவண்ணரோ தாழ்குழல்வாடச் சதிர்செய்வதோ இவர்சார்வே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏவலத்தால்விச யற்கருள்செய்து இராவண னையீடழித்து
மூவரிலும்முத லாய்நடுவாய மூர்த்தியை யன்றிமொழியாள்
யாவர்களும்பர வுமெழிற்பாச்சி லாச்சிரா மத்துறைகின்ற
தேவர்கள் தேவரோ சேயிழைவாடச் சிதைசெய்வதோ இவர்சார்வே? 8

மேலதுநான்முக னெய்தியதில்லைக் கீழது சேவடிதன்னை
நீலதுவண்ணறு மெய்தியதில்லை யெனவிவர் நின்றதுமல்லால்
ஆலதுமாமதி தோய்பொழிற்பாச்சி லாச்சிரா மத்துறைகின்ற
பாலதுவண்ணரோ பைந்தொடிவாடப் பழிசெய்வதோ இவர்பொற்பே. 9

நாணொடுகூடிய சாயினரேனும் நகுவ ரவரிருபோதும்
ஊணொடுகூடிய வுட்குந்தகையா லுரைகளவைகொள வேண்டா
ஆணொடுபெண்வடி வாயினர்பாச்சி லாச்சிரா மத்துறைகின்ற
பூணெடுமார்பரோ பூங்கொடிவாடப் புனைசெய்வதோ இவர்பொற்பே. 10

அகமலியன்பொடு தொண்டர்வணங்க ஆச்சிரா மத்துறைகின்ற
புகைமலிமாலை புனைந்தழகாய புனிதர்கொ லாமிவரென்ன
நகைமலிதண்பொழில் சூழ்தருகாழி நற்றமிழ் ஞானசம்பந்தன்
தகைமலிதண்டமிழ் கொண்டிவையேத்தச் சாரகி லாவினைதானே. 11

திருச்சிற்றம்பலம்

## 7. வயிற்றுவலி, குடல்புண் போன்ற நோய்கள் நீங்குவதற்கு ஓதவேண்டிய பதிகம்

பண் - கொல்லி (4-1)

### தேவாரம்

திருச்சிற்றம்பலம்

கூற்றாயின வாறு விலக்ககலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிர வும்பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றி னகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. 1

நெஞ்சம்உமக் கேயிட மாகவைத்தேன்
நினையா தொருபோதும் இருந்தறியேன்
வஞ்சம்இது வொப்பது கண்டறியேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாக வந்தென்னை நலிவதனை
நணுகாமற் றுரந்து கரந்துமிடீர்
அஞ்சேலு மென்னீ ரதிகைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. 2

பணிந்தாரன பாவங்கள் பாற்றவல்லீர்
படுவெண்டலை யிற்பலி கொண்டுழல்வீர்
துணிந்தேயுமக் காட்செய்து வாழலுற்றாற்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
பிணிந்தார்பொடி கொண்டு மெய் பூசவல்லீர்
பெற்றமேற்றுகந் தீர்சுற்றும் வெண்டலைகொண்
டணிந்தீரடி கேளதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. 3

முன்னம்அடி யேனறி யாமையினான்
முனிந்தென்னை நலிந்து முடக்கியிடப்
பின்னையடி யேனுமக் காளும்பட்டேன்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
தன்னையடைந் தார்வினை தீர்ப்பதன்றோ
தலையாயவர் தங்கட னாவதுதான்
அன்னநடை யாரதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. 4

காத்தாள்பவர் காவ லிகழ்ந்தமையாற்
கரைநின்றவர் கண்டுகொ ளென்றுசொல்லி
நீத்தாய கயம்புக நூக்கியிட
நிலைக்கொள்ளும் வழித்துறை யொன்றறியேன்
வார்த்தையிது வொப்பது கேட்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
ஆர்த்தார்புன லாரதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. 5

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலு முன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்
உலந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலுள்ளுறு சூலை தவிர்த்தருள்வாய்
அலந்தேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. 6

உயர்ந்தேன் மனை வாழ்க்கையு மொண்பொருளும்
ஒருவர்தலை காவலிலாமையினாற்
வயந்தேயுமக் காட்செய்து வாழலுற்றால்
வலிக்கின்றது சூலை தவிர்த்தருளீர்
பயந்தேயென் வயிற்றி னகம்படியே
பறித்துப்புரட் டியறுத் தீர்த்திடநான்
அயர்ந்தேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. 7

வலித்தேன்மனை வாழ்க்கை மகிழ்ந்தடியேன்
வஞ்சம்மன மொன்று மிலாமையினால்
சலித்தாலொரு வர்துணை யாருமில்லைச்
சங்கவெண்குழைக் காதுடை யெம்பெருமான்
கலித்தேயென் வயிற்றி னகம்படியே
கலக்கிமலக் கிட்டுக் கவர்ந்துதின்ன
அலுத்தேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. 8

பொன்போல மிளிர்வதோர் மேனியினீர்
புரிபுன்சடை யீர்மெலி யும்பிறையீர்
துன்பேகவ லைபிணி யென்றிவற்றை
நணுகாமற் றுரந்து கரந்துமிடீர்
என்போலிக ளும்மை யினித்தெளியார்
அடியார் படுவ திதுவேயாகில்
அன்பேயமை யும்மதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. 9

போர்த்தாயங்கோ ரானையின் ஈருரிதோல்
புறங்கா டரங்காநட மாடவல்லாய்
ஆர்த்தானரக் கன்றனை மால்வரைக்கீழ்
அடர்த்திட் டருள்செய்த வதுகருதாய்
வேர்த்தும்புரண்டும் விழுந்தும் எழுந்தால்
என்வேதனை யான விலக்கியிடாய்
ஆர்த்தார்புனல் சூழதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. 10

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. எலும்பு முறிவு, இளம்பிள்ளை வாதம், பக்கவாதம்போன்ற நோய்கள் நீங்குவதற்கு ஓதவேண்டிய பதிகம்.

பண் - சாதாரி

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

விங்குவிளை களனிமிகு கடைசியர்கள்
பாடல்விளை யாடல் அரவம்
மங்குலொடு நீள் கொடிகள் மாடமலி
நீடுபொழில் மாகறல் உளான்
கொங்கு விரி கொன்றையொடு கங்கை வளர்
திங்கள் அணி செங்சடையினான்;
செங்கண் விடை அண்ணல் அடி சேர்பவர்கள்
தீவினைகள் தீரும் உடனே. 1

கவையின் ஒலி மங்கையர்கள் பாடல் ஒலி
ஆடல் கவின் எய்தி அழகு ஆர்
மலையின் நிகர் மாடம் உயர் நீள்கொடிகள்
வீசும் மலி மாகறல் உளான்;
இலையின் மலி வேல் நுனைய சூலம் வலன்
ஏந்தி எரி புன்சடையினுள்
அலைகொள் புனல் ஏந்து பெருமான், அடியை
ஏத்த வினை அகலும் மிகவே. 2

காலையொடு துந்துபிகள் சங்கு, குழல்,
யாழ், முழவு காமருவு சீர்
மாலை வழி பாடுசெய்து மாதவர்கள்
ஏத்தி மகிழ் மாகறல் உளான்
தோலை உடை பேணி அதன் மேல் ஓர்சுடர்
நாகம் அசையா அழகிதாப்
பாலை அன நீறுபுனை வான், அடியை
ஏத்த வினைபறையும் உடனே. 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு கதிர் முத்தினொடு பொன்மணிகள்
உந்தி எழில் மெய்யுள் உடனே
மங்கையரும் மைந்தர்களும் மன்னுபுனல்
ஆடிமகிழ் மாகறல் உளான்
கொங்கு வளர் கொன்றை குளிர் திங்கள் அணி
செஞ்சடையினான் அடியையே
நுங்கள் வினை தீரமிக ஏத்தி வழி
பாடுநுகரா எழுமினே. 4

துஞ்சு நறு நீலம் இருள் நீங்க ஒளி
தோன்றும் மது வார் கழனிவாய்,
மஞ்சுமலி பூம்பொழிலில் மயில்கள் நடம்
ஆட மலி மாகறல் உளான்;
வஞ்சமத யானைஉரி போர்த்து மகிழ்
வான் ஓர் மழுவாளன் வளரும்
நஞ்சம் இருள் கண்டம் உடை நாதன் அடி
யாரை நலியா வினைகளே. 5

மன்னு மறை யோர்களொடு பல்படிம
மாதவர்கள் கூடி உடன் ஆய்
இன்ன வகை யால்இனிது இறைஞ்சி, இமையோரில்
எழு மாகறல் உளான்
மின்னை விரி புன்சடையின் மேல் மலர்கள்
கங்கையொடு திங்கள் எனவே
உன்னுமவர் தொல் வினைகள் ஒல்க உயர்
வான் உலகும் ஏறல் எளிதே. 6

வெய்யவினை நெறிகள் செல வந்து அணையும்
மேல் வினைகள் வீட்டல் உறுவீர்,
மைகொள் விரி கானல் மது வார்கழனி
மாகறல் உளான் எழில் அது ஆர்
கையகரி கால் வரையில் மேலது உரிதோல்
உடையமேனி அழகு ஆர்
ஐயன்அடி சேர்பவரை அஞ்சி அடையா
வினைகள் அகலும் மிகவே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூசு துகில் நீள்கொடிகள் மேகமொடு
தோய்வன பொன் மாடமிசையே
மாசுபடு செய்கை மிக மாதவர்கள்
ஓதிமலி மாகறல் உளான்
பாசுபச் இச்சை வரி நச்சு அரவு
கச்சை உடை பேணி அழகுஆர்
பூசுபொடி ஈசன் என ஏத்தவினை
நிற்றல் இல, போகும் உடனே. 8

தூய விரி தாமரைகள் நெய்தல் கழு
நீர் குவளை தோன்று மது உண்
பாய வரி வண்டுபல பண்முரலும்
ஓசைபயில் மாகறல் உளான்
சாய விரல் ஊன்றிய இராவணன்
தன்மை கெட நின்ற பெருமான்
ஆய புகழ் ஏத்தும் அடியார்கள் வினை
ஆயினவும் அகல்வது எளிதே. 9

காலின் நல பைங்கழல்கள் நீள்முடியின்
மேல் உணர்வு காமுறவினார்
மாலும் மலரானும் அறியாமை எரி
ஆகி உயர் மாகறல் உளான்
நாலும் எரி தோலும் உரிமா மணிய
நாகமொடு கூடி உடனாய்
ஆலும் விடை ஊர்தி உடை அடிகள்
அடியாரை அடையா வினைகளே. 10

கைகொள் நெடு மாடம் மிக ஓங்குகமழ்
வீதி மலி காழியவர் கோன்,
அடையும் வகை யால், பரவி அரனை அடி
கூடு சம்பந்தன் உரையால்,
மடைகொள் புனலோடு வயல்கூடு பொழில்
மாகறல் உளான் அடியையே
உடையதமிழ் பத்தும் உணர் வார் அவர்கள்
தொல்வினைகள் ஒல்கும் உடனே. 11

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாசகம்

மாணிக்கவாசக சுவாமிகள் அருளியது

# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

தொல்லை யிரும்பிறவிச் சூழுந்தளை நீக்கி
அல்ல லறுத்தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னுந் தேன்.

நமச்சிவாய வாஅழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தன்அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல்இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினஎல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவுஇறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழு வழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன்ஆர் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தம் கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடர்ஒளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேஓ என்று என்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓஎன்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. திக்குவாய், வாய்தொடர்பான நோய்கள் நீங்கவும் பேச்சுவன்மை பெறவும் ஓதவேண்டிய பதிகம்

### திருவாசகம்

திருச்சிற்றம்பலம்

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ. 1

என்னப்பன் எம்பிரான் எல்லோர்க்குந் தானீசன்
துன்னம்பெய் கோவணமாக் கொள்ளுமது என்னேடீ
மன்னுகலை துன்னுபொருள் மறைநான்கே வான்சரடாத்
தன்னையே கோவணமாச் சாத்தினன்காண் சாழலோ. 2

கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை
தாயுமிலி தந்தையிலி தான்தனியன் காணேடீ
தாயுமிலி தந்தையிலி தான்தனியன் ஆயிடினுங்
காயில் உலகனைத்துங் கற்பொடிகாண் சாழலோ. 3

அயனை அனங்கனை அந்தகனைச் சந்திரனை
வயனங்கள் மாயா வடுச்செய்தான் காணேடீ
நயனங்கள் மூன்றுடைய நாயகனே தண்டித்தால்
சயமன்றோ வானவர்க்குத் தாழ்குழலாய் சாழலோ. 4

தக்கனையும் எச்சனையுந் தலையறுத்துத் தேவர்கணம்
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்ததுதான் என்னேடீ
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்தருளி அருள்கொடுத்தங்
கெச்சனுக்கு மிகைத்தலைமற் றருளினன்காண் சாழலோ. 5

அலரவனும் மாலவனும் அறியாமே அழலுருவாய்
நிலமுதற்கீழ் அண்டமுற நின்றதுதான் என்னேடீ
நிலமுதற்கீழ் அண்டமுற நின்றிலனேல் இருவருந்தம்
சலமுகத்தால் ஆங்காரந் தவிரார்காண் சாழலோ. 6

மலைமகளை யொருபாகம் வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தால் அவன்சடையிற் பாயுமது என்னேடீ
சலமுகத்தால் அவன்சடையிற் பாய்த்திலனேல் தரணியெல்லாம்
பிலமுகத்தே புகப்பாய்ந்து பெருங்கேடாஞ் சாழலோ. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலால மாகிக் குரைகடல்வாய் அன்றெழுந்த
ஆலாலம் உண்டான் அவன்சதுர்தான் என்னேடீ
ஆலாலம் உண்டிலனேல் அன்றயன்மால் உள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ. 8

தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெரும்பித்தன்காணேடீ
பெண்பா லுகந்திலனேற் பேதாய் இருநிலத்தோர்
விண்பா லியோகெய்தி வீடுவர்காண் சாழலோ. 9

தானந்தம் இல்லான் தனையடைந்த நாயேனை
ஆனந்த வெள்ளத் தழுத்துவித்தான் காணேடீ
ஆனந்த வெள்ளத் தழுத்துவித்த திருவடிகள்
வானுந்து தேவர்கட்கோர் வான்பொருள்காண் சாழலோ. 10

நங்காய் இதென்னதவம் நரம்போ டெலும்பணிந்து
கங்காளம் தோள்மேலே காதலித்தான் காணேடீ
கங்காளம் ஆமாகேள் காலாந்த ரத்திருவர்
தங்காலஞ் செய்யத் தரித்தனன்காண் சாழலோ. 11

கானார் புலித்தோல் உடைதலைஊண் காடுபதி
ஆனால் அவனுக்கிங் காட்படுவார் ஆரேடீ
ஆனாலுங் கேளாய் அயனுந் திருமாலும்
வானாடர் கோவும் வழியடியார் சாழலோ. 12

மலையரையன் பொற்பாவை வாள்நுதலாள் பெண்திருவை
உலகறியத் தீவேட்டான் என்னுமது என்னேடீ
உலகறியத் தீவேளா தொழிந்தனனேல் உலகனைத்துங்
கலைநவின்ற பொருள்க ளெல்லாங் கலங்கிடுங்காண் சாழலோ. 13

தேன்புக்க தண்பணைசூழ் தில்லைச்சிற் றம்பலவன்
தான்புக்கு நட்டம் பயிலுமது என்னேடீ
தான்புக்கு நட்டம் பயின்றிலனேல் தரணியெல்லாம்
ஊன்புக்க வேற்காளிக் கூட்டாங்காண் சாழலோ. 14

கடகரியும் பரிமாவும் தேரும்உகந் தேறாதே
இடபம்உகந் தேறியவா றெனக்கறிய இயம்பேடீ
தடமதில்கள் அவைமூன்றுந் தழலெரித்த அந்நாளில்
இடபமதாய்த் தாங்கினான் திருமால்காண் சாழலோ. 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றாக நால்வர்க்கும் நான்மறையின் உட்பொருளை
அன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான் காணேடீ
அன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான் ஆயிடினுங்
கொன்றான்காண் புரமூன்றுங் கூட்டோடே சாழலோ. 16

அம்பலத்தே கூத்தாடி அமுதுசெயப் பலிதிரியும்
நம்பனையுந் தேவனென்று நண்ணுமது என்னேடீ
நம்பனையும் ஆமாகேள் நான்மறைகள் தாமறியா
எம்பெருமான் ஈசாவென் றேத்தினகாண் சாழலோ. 17

சலமுடைய சலத்தரன்றன் உடல்தடிந்த நல்லாழி
நலமுடைய நாரணற்கன் றருளியவா றென்னேடீ
நலமுடைய நாரணன்தன் நயனம்இடந் தரனடிக்கீழ்
அலராக இடஆழி அருளினன்காண் சாழலோ. 18

அம்பரமாம் புள்ளித்தோல் ஆலாலம் ஆரமுதம்
எம்பெருமான் உண்டசதுர் எனக்கறிய இயம்பேடீ
எம்பெருமான் ஏதுடுத்தங் கேதமுது செய்திடினும்
தம்பெருமை தானறியாத் தன்மையன்காண் சாழலோ. 19

அருந்தவருக் காலின்கீழ் அறமுதலா நான்கினையும்
இருந்தவருக் கருளுமது எனக்கறிய இயம்பேடீ
அருந்தவருக் கறமுதல்நான் கன்றருளிச் செய்திலனேல்
திருந்தவருக் குலகியற்கை தெரியாகாண் சாழலோ. 20

திருச்சிற்றம்பலம்

## திருவிசைப்பா

களையா உடலோடு சேரமான் ஆரூரன்
விளையா மதமாறா வெள்ளானை மேல்கொள்ள
முளையா மதிசூடி! மூவாயிரவரொடும்
அளையா விளையாடும் அம்பலம்நின் ஆடரங்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சேவிக்க வந்தயன் இந்திரன்
செங்கண்மால் எங்குந்திசை திசையன
கூவிக்கவர்ந்து நெருங்கிக்
குழாங்குழா மாய்நின்று கூத்தாடும்
ஆவிக்(கு) அமுதைஎன் ஆர்வத்
தனத்தினை அப்பனை ஒப்பமரர்
பாவிக்கும் பாவகத்(து) அப்புறத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

தெண்ணிலா மலர்ந்த வேணியா யுன்றன்
திருநடங் கும்பிடப் பெற்று
மண்ணிலே பிறவியே யெனக்கு
வாலஜதா மின்பமா மென்று
கண்ணிலா னந்த அருவிநீர் சொரியக்
கைம்பல ருச்சிமேற் குவித்துப்
பண்ணினா னீடி யறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்

## திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனாமாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறைகள்

திருஞானசம்பந்தப்பெருமான் அருளிச்செய்த தேவாரம் முதல்; சேக்கிழார் திருத்தொண்டர் பெரியபுராணம் வரையுள்ள பாடல்களின் தொகுப்பே திரு முறைகள் திருமுறைகள். பிரணவத்தின் வடிவாய் உள்ளன. ஓங்கார உயிரொலியில் "தோடுடைய" எனத்தொடங்கி மகர ஒற்றில் உலகெலாம் என முடிகிறது. முதல் ஏழு திருமுறைகளும் தேவாரங்கள் இவை அடங்கன்முறை எனப்படும். இவற்றை அருளிச் செய்த திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆதியோர் தேவார முதலிகள் எனப்படுவர்.

ஆதியிலுள்ள தேவாரத் திருப்பதிகத் தொகை:-

| | |
|---|---|
| திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் | 16000 |
| திருநாவுக்கரசு நாயனார் | 49000 |
| சுந்தரமூர்திநாயனார் | 38000 |
| | 103000 |

இப்போதுள்ள தேவாரத் திருப்பதிகத் தொகை

| | தலப்பதிகம் | பொதுப்பதிகம் | இரண்டின் தொகை |
|---|---|---|---|
| சம்பந்தர் | 377 | 07 | 384 |
| அப்பர் | 276 | 37 | 313 |
| சுந்தரர் | 95 | 05 | 100 |
| | 748 | 49 | 797 |

**திருஞானசம்பந்தர் தேவாரம்**

| முதலாந் திருமுறை | | இரண்டாந் திருமுறை | | மூன்றாம் திருமுறை | |
|---|---|---|---|---|---|
| நட்டபாடை | 22 | இந்தளம் | 39 | காந்தார பஞ்சம் | 23 |
| தக்கராகம் | 24 | சீகாமரம் | 14 | கொல்லி | 18 |
| பழந்தக்கராகம் | 16 | காந்தாரம் | 29 | கொல்லிக்கௌவாணம் | 1 |
| தக்கேசி | 12 | பியந்தைக்காந்தாரம் | 14 | கௌசிகம் | 13 |
| குறிஞ்சி | 29 | நட்டராகம் | 16 | பஞ்சமம் | 11 |
| வியாழக்குறிஞ்சி | 25 | செவ்வழி | 10 | சாதாரி | 33 |
| மேகராகக் குறிஞ்சி | 07 | | | பழம்பஞ்சுரம் | 18 |
| யாழ்மூரி | 01 | | | புறநீர்மை | 6 |
| | | | | அந்தாளிக்குறிஞ்சி | 2 |
| | 136 | | 122 | | 125 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றோடு திருமறைக்காடு பண், கொல்லி, வெள்ளிப்பதிகம் ஒன்றும் சேர்த்து யாழ்மூரியோடு பண் இருபத்திரண்டிற்கும் பதிகம் 384

**திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்**

| நான்காந் திருமுறை | | ஐந்தாந் திருமுறை | ஆறாந் திருமுறை |
|---|---|---|---|
| கொல்லி | 01 | திருக்குறுந்தொகை | திருத்தாண்டவம் |
| காந்தாரம் | 06 | 100 | 99 |
| பியந்தைக்காந்தாரம் | 01 | | |
| சாதாரி | 01 | | |
| காந்தாரபஞ்சமம் | 02 | | |
| பழந்தக்கராகம் | 02 | | |
| பழம்பஞ்சுரம் | 02 | | |
| இந்தளம் | 03 | | |
| சீகாமரம் | 02 | | |
| குறிஞ்சி | 01 | | |
| திருநேரிசை (கொல்லி) | 02 | | |
| திருநேரிசை | 56 | | |
| திருவிருத்தம் (கொல்லி) | 2 | | |
| திருவிருத்தம் | 33 | | |
| | 114 | | |

ஆறாந்திருமுறை திருத்தாண்டகம் ஆகும். பெரிய திருத் தாண்டகம் புக்கதிருத்தாண்டகம், ஏழைத்திருத் தாண்டகம், அடையாளத்திருத்தாண்டகம், போற்றித் திருத்தாண்டகம், காப்புத்திருத்தாண்டகம், அறநெறித்திருத் தாண்டகம் என ஆறு வகைப்படும்.

**சுந்தரமூர்த்திநாயனார் தேவாரம்**

**ஏழாந் திருமுறை**

| | | | |
|---|---|---|---|
| (1) இந்தளம் | 12 | (10) காந்தாரபஞ்சம் | 01 |
| (2) தக்கராகம் | 04 | (11) நட்டபாடை | 05 |
| (3) நட்டராகம் | 14 | (12) புறநீர்மை | 03 |
| (4) கொல்லி | 07 | (13) சீகாமரம் | 04 |
| (5) கொல்லிக்கௌவாணம் | 09 | (14) குறிஞ்சி | 04 |
| (6) பழம்பஞ்சுரம் | 07 | (15) கொளசிகம் | 01 |
| (7) தக்கேசி | 17 | (16) செந்துருத்தி | 01 |
| (8) காந்தாரம் | 05 | (17) பஞ்சமம் | 05 |
| (9) பியந்தைக்காந்தாரம் | 01 | | 100 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எட்டாந்திருமுறை

எட்டாந்திருமுறை மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம், திருக்கோவையார் ஆகும்.

திருவாசகத்தில் சிவபுராணம் முதலாக அச்சோப் பத்து வரை 51 பதிகங்களுக்கு 658 பாடல்கள் உள் ளன. திருவாசகப் பாடல் பெற்ற தலங்கள் திருவண்ணா மலை, திருவாரூர், உத்தரகோசமங்கை, கழுக்குன்றம், தோணிபுரம், திருப்பெருந்துறை.

இறைவனைப் பாடுடைத்தலைவனாகக் கொண்டு பாடப்பட்ட திருக்கோவையில் 400 பாடல்கள் உள்ளன.

## ஒன்பதாந்திருமுறை

ஒன்பதாந் திருமுறை திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஆகும். திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த் தேவர், பூந்துருந்தி நம்பிகாடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர் ஆகியோர் திருவிசைப்பாப் பாடியுள் ளனர். கோயில் என்னும் தில்லையம்பலத்திற்கு 16 பதிகங்களும் திருவீழிமிழலை, திருவாவடுதுறை, திரு விடைக்கழி, திருக்களந்தைஆதித்தேச்சரம், திருக் கீழ்க்கோட்டூர்மணியம்பலம், திருமுகத்தலை திரை லோக்கியசுந்தரம், கங்கை கொண்ட சோளேச்சரம், திருப்பூவணம், திருச்சாட்டியக்குடி, தஞ்சை இராஜரா ஜேச்சரம், திருவிடை மருதூர், திருவாரூர் ஆகிய 13 தலங்களுக்கும் தலத்திற்கொன்றாகப் பதின்மூன்று பதிகங்களுமாக29 பதிகங்களுக்குப் பாடல்கள் 301. இவை பஞ்சமம், காந்தாரம், புறநீர்மை, சாளரபாணி, நட்டராகம், இந்தளம் ஆகிய பண்களில் அமைந் துள்ளன.

திருப்பல்லாண்டு கோயில் என்ற தில்லையம்பலத் தின்மீது சேந்தனாரால் பாடப்பட்டது. இதில் 13 பாடல்கள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பத்தாந்திருமுறை**

திருமூல நாயனார் பாடிய திருமந்திரம் இதில் மூவாயிரம் பாடல்கள் உள்ளன

**பதினொராந்திருமுறை**

பதினொராந் திருமுறை திருவாலவாயுடையார் முதலிய பன்னிருவர் பாடிய 40 பிரபந்தங்கள்.

**1. திருவாலவாயுடையார்**

1. சேரமான்பெருமானாயனாருக்கு அருளிசெய்த திருமுகப் பாசுரம்.

**2. காரைக்கால் அம்மையர்**

1. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் இரண்டு
2. திருவிரட்டைமணிமாலை
3. அற்புதத் திருவந்தாதி

**3. ஐயடிகள் காடவர்கோனாயனார்**

1. திருவெண்பா

**4. சேரமான் பெருமாணாயனார்**

1. பொன்வண்ணத்தந்தாதி
2. திருவாரூர் மும்மணிக்கோவை
3. திருக்கைலாசஞானவுலா

**5. நக்கீரதேவர்**

1. கைலைபாதி காளத்திபாதியந்தாதி
2. திருவீங்கோய்மலையெழுபது
3. திருவலஞ்சுழி மும்மணிக்கோவை
4. திருவெழுகூற்றிருக்கை
5. பெருந்தேவபாணி
6. கோபப்பிரசாதம்
7. காரெட்டு
8. போற்றித் திருவகவல்
9. திருமுருகாற்றுப்படை
10. திருகண்ணப்பதேவர் திருமறம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**6. கல்லாடனார்**

1. திருக்கண்ணப்பதேவர் திருமறம்

**7. கபிலதேவ நாயனார்**

1. மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை
2. சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை
3. சிவபெருமான் திருவந்தாதி

**8. பரணதேவர்**

1. சிவபெருமான் திருவந்தாதி

**9. இளம்பெருமானடிகள்**

1. சிவபெருமான் திருமும்மணிக்கோவை

**10. அதிராவடிகள்**

1. மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கேவை

**11. பட்டினத்துப்பிள்ளையார்**

1. கோயினான் மணிமாலை
2. திருக்கழுமல மும்மணிக்கோவை
3. திருவிடைமருதூர் மும்மணிக்கோவை
4. திருவேகம்பமுடையார் திருவந்தாதி
5. திருவொற்றியூர் ஒருபா ஒருப்.து

**12. நம்பியாண்டார்நம்பி**

1. திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை
2. கோயிற்றிருப்பண்ணியர்விருத்தம்
3. திருத்தொண்டர் திருவந்தாதி
4. ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி
5. ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம்
6. ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை
7. ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம்

9. ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை

10. திருநாவுக்கரசு நாயனார் திருவேகாதசமாலை

**பன்னிரண்டாந் முறை**

பன்னிரண்டாந் திருமுறை சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் புராணம். இதில் இரண்டு காண்டங்களும், திருமலைச்சருக்கம், தில்லைவாழ் அந்தணர்சருக்கம், இலைமலிந்தசருக்கம், மும்மையால் உல காண்ட சருக்கம், திருநின்றசருக்கம், வம்பறாவரி வண்டுச் சருக்கம், வார்கொண்ட வனமுலையாள் சருக்கம், பெய்யடிமையில்லாத புலவர்சருக்கம், கறைக்கண்டன் சருக்கம், கடல்சூழ்ந்த சருக்கம், பக்தராய்ப் பணிவார் சருக்கம், மன்னியசீர்ச்சருக்கம் வெள்ளானைச் சருக்கம் எனப்பன்னிரண்டு சருக்கங்களும் 4286 பாடல்களும் உள்ளன.

*பிரபந்தம் - 40*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவில்கின்றோம்

எமது குடும்பத்தலைவரைப் பிரிந்து ஆறாத்துயருற்ற வேளை எம்அருகே வந்து துயரத்திற் பங்கேற்று ஆறுதல் கூறியவர்களுக்கும், நோயுற்ற போதெல்லாம் வைத்திய உதவி செய்த வைத்தியர்களுக்கும், ஈமச்சடங்கில் பங்குபற்றி அஞ்சலி செலுத்தியோருக்கும், அஞ்சலி உரை நிகழ்த்திய சைவச் சான்றோற்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், அபரக்கிரியையின் போது உதவிய அன்பர்களுக்கும் தொலைபேசி, தந்தி மூலம் அனுதாபந் தெரிவித்தவர்களுக்கும் வேறு பல வழிகளிலும் எமக்கு உதவிய உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நினைவு மலர் வெளிவர உதவி புரிந்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இல. 6,
4வது ஒழுங்கை,
குருமன் காடு,
வவுனியா.

இங்ஙனம்
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

★விசுவநாதர் + ★இளையபிள்ளை
||
★ஆச்சிமுத்து + ★கணபதிப்பிள்ளை
★வயிரவப்பிள்ளை + ★சின்னத்தங்கம்
||
★செல்வநாயம்
★சீனிப்பிள்ளை + ★வைத்திலிங்கம்
★செல்லையா + மகேஸ்வரி

★இராமு + ★சின்னாச்சி
||
★கனகசபை + ★நாகமுத்து
||
★பரமேஸ்வரி + ★தங்கராசா
மகேஸ்வரி + செல்லையா
★மகாதேவன் + வாசுகி
இராஜேஸ்வரி + பாலசிங்கம்
தர்மதேவன் + நாகரத்தினம்
குமாரதேவன் + சொர்ணகாந்திலஷ்மி
புவனேஸ்வரி + ஜெகநாதன்
யோகேஸ்வரி + ★ஞானேந்திரன்

**★செல்லையா + மகேஸ்வரி**
||

புவனேந்திரராணி
+
ஸ்ரீஸ்காந்தன்
||
இந்துஷா
தேனுஷன்
நிருஷன்

ஞானேந்திரராணி
+
இராசரத்தினம்
||
சாந்தினி + கணேஷ்
கலைவாணி
கோமதி

மனோகரராணி

தயாபரராணி
+
விமலேஸ்வரன்

நவநீதகுமார்

★ இக்குறியீடு அமரர்களைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed by: LUXMI PRINTER - 195, Wolfendhal Street, Colombo-13. Tel: 448545, 458273, 473533 Fax: 330588 E-mail: luxmiprint@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org